செ.வெ.எண்.74 நாள்.21.07.2017.

**திருநெல்வேலியில் தேசிய தாழ்த்தப்பட்டோர் நல ஆணைய துணைத் தலைவர் திரு.எல்.முருகன் அவர்கள்தலைமையில் அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கப்பட்டு வரும் அரசு நலத்திட்ட உதவிகள் மற்றும் இழப்பீட்டுத் தொகைகள் உள்பட வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது குறித்த ஆய்வுக் கூட்டம் தேசிய தாழ்த்தப்பட்டோர் நல ஆணைய துணைத் தலைவர் திரு.எல்.முருகன் அவர்கள் தலைமையில் இன்று (21.07.2017) நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றி, திருநெல்வேலி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்களை பற்றி விளக்கி பேசினார்.

கூட்டத்தில், தேசிய தாழ்த்தப்பட்டோர் நல ஆணைய துணைத் தலைவர் அவர்கள் பேசியதாவது–

தேசிய தாழ்த்தப்பட்டோர் நல ஆணையத்தின் மூலம் தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை நாமக்கல், திருச்சிராப்பள்ளி, சென்னை, கோயம்புத்தூர், மதுரை, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஆய்வு செய்யப்பட்டது. இன்று திருநெல்வேலி மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவ, மாணவிகளுக்கு விதிமுறைகளின் படி இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள என்பதை துறை அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு அறிக்கை அளிக்க வேண்டும். மத்திய, மாநில அரசுகளின் மூலம் வழங்கப்பட்டு வரும் சலுகைகள் முறையாக வழங்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும் தெரிவிக்க வேண்டும். பணி நியமனம் மற்றும் பதவி உயர்வுகளுக்கான இட ஒதுக்கீடுகள் பின்பற்றப்பட்டுள்ளதா என்பது குறித்தும் ஆய்வு செய்திடவேண்டும். SC/ST மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகைகள் குறித்த காலத்தில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பஞ்சமி நிலங்கள் மற்றவர்களிட உள்ளதை திரும்ப பெற்று ஆதிதிராவிடர்களுக்கு வழங்க வேண்டும். ஆதிதிராவிட மாணவ, மாணவிகளின் விடுதிகளை ஆய்வு மேற்கொண்டு அங்கு அடிப்படை வசதிகள் சிறப்பாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மாநகராட்சிகளில் துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான வசதிகளை செய்துதர வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தில் வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் 412 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் 22 வழக்குகள் தலித் பெண்களின் மீதான பாலியல் துன்புறுத்தல் வழக்குகளாகும். மேலும், கொலை உள்ளிட்ட கொடூர குற்ற வழக்குகள் 33 பதிவு செய்யப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்திற்கு சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளதால் இவ்வழக்குகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மாநகராட்சி மூலம் அம்பேத்கர் சிலை பகுதியில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், சிலையினை சுற்றி பென்சிங் அமைத்து கார்டன் அமைக்க வேண்டும். SC/ST மாணவ, மாணவிகளின் விடுதிகளில் சிசிடிவி அமைக்கவும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரங்களை அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். SC/ST சமுதாயத்தினருக்கு பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கிட உத்தரவுகள்இருந்தாலும், கடைக்கோடியில் உள்ள மக்களுக்கும் உதவிகளை சென்று சேர்க்கும் பொறுப்பு அலுவலர்களுக்கே உள்ளது. எனவே, அலுவலர்கள் பராபட்சமின்றி திட்டங்களை செயல்படுத்திட வேண்டும் என பேசினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண் சக்தி குமார்,இ.கா.ப., மாநகர காவல் துணை ஆணையர் திரு.சுகுண சிங், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம் பகவத்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் திரு.சு.சிவசுப்பிரமணியன், தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் நல ஆணைய இயக்குநர் திரு.மதியழகன், மூத்த விசாரணை அதிகாரி திரு.லிஸ்டர், மதுரை மாவட்ட விழிப்புணர்வு கண்காணிப்புக்குழு உறுப்பினர் திரு.பாண்டியராஜன் மற்றும் அலுவலர்கள், SC/ST சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.